நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
(பதிவு எண்: என்.எம்.ஆர்.180) GSTIN: 33AAEAN8010C1Z6
1 / 1167, பரமத்தி ரோடு, E B காலனி(அ), நாமக்கல்(வ&மா) PIN - 637 001.
Website: www.aavinmilk.com *** Email: aavinnmkl@gmail.com *** Phone: 04286-285512.

ந.க. எண்.331/NKL CC/Contract Labour/2021 நாள்:26 -05-2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து பால் வண்டிகள் மூலம் கேன்களில் எடுத்து வரும் பாலை நாமக்கல் குளிரூட்டும் நிலையத்தில் இறக்கவும், அதனை பால் தொட்டியில் ஊற்றவும் பின் காலி கேன்களை சுத்தம் செய்து மீண்டும் அதே வண்டிகளில் ஏற்றுவதற்கு ஏதுவாக வைக்கவும் மற்றும் இது தொடர்பான இதர பணிகளை மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் இரண்டு பகுதிகளாக (Two Part) தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து தனித் தனி டெண்டர்களாக வரவேற்கப்படுகின்றன.

**பணியிடம்**

1. நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையம், லத்துவாடி, நாமக்கல் – 637002.

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்படிவ விலை மற்றும் படிவம் பெற கடைசி நாள் மற்றும் நேரம் | நேரில் ரூ. 2000/–<br>**16-06-2022** மாலை 3.00 மணி வரை<br>தபால் வழி ரூ. 2250/–<br>**13 -06-2022** மாலை 3.00 மணி வரை |
| 2 | கலந்துரையாய்வு கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் | **07-06-2022** காலை 11.00 மணியளவில் |
| 2 | மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் படிவம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | **16 -06-2022 மதியம் 2.00** மணி வரை |
| 3 | பகுதி - 1 முன் தகுதி படிவம் (Technical Bid) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | **16 -06-2022 மதியம் 2.30** மணி க்கு |
| 4 | மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்படிவம் திறக்கப்படும் இடம் | நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., 1 / 1167, பரமத்தி ரோடு, E B காலனி(அ), நாமக்கல்(வ&மா) PIN - 637 001. |
| 5 | ஒப்பந்தக்காலம் | இரண்டு வருடங்கள்(2022–2023 மற்றும் 2023–2024) |
| | பணிகளின் விபரம், ஒப்பந்தப்படிவம் விலை, டேவணித்தொகை(**EMD**), பிணையத்தொகை(**SD**), டெண்டர் நிபந்தனைகள், பணியாளர்களின் தகுதிகள் மற்றும் இதர விபரங்களை தமிழக அரசின் இணையதளம் **www.tenders.tn.gov.in**-ல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். | |

ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கையில் கீழ்க்காண்ட விவரங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர், முகவரி | பொது மேலாளர்<br>நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,<br>நாமக்கல் – 637 001. |
| 2 அ | பணியின் விபரம் | **(1) நாமக்கல் குளிரூட்டும் நிலையத்தில்** பால் வண்டியில் இருந்து பால் கேன்களை இறக்குதல், பாலை தொட்டியில் ஊற்றி பின் காலி கேன்களை சுத்தம் செய்து மீண்டும் அதனை அதே வண்டியில் ஏற்ற ஏதுவாக வைத்தல் மற்றும் இது தொடர்பான இதர பணிகள்<br>**1 \| நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையம் \| 43 லட்சம்** |
| ஆ | பணிகள் நடைபெறும் மாவட்டத்தின் பெயர் | **நாமக்கல் மாவட்டம்** |
| 3 | எந்த இடத்தில், எந்த தேதி வரை, என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமான படிவம் கிடைக்கும் என்ற விபரம் | நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் ,1/1167 பரமத்தி ரோடு, EB காலனி(அ),நாமக்கல் (வ &மா). PIN – 637001.<br>விளம்பரம் செய்த நாளிலிருந்து<br>**16 -06-2022 –**ம் தேதி வரை<br>ரூ.2000 /–ஐ செலுத்தி நேரிலும்<br>**13 -06-2022** ம் தேதி வரை<br>ரூ.2250/–க்கான வரைவோலை அனுப்பி தபாலிலும் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை தமிழக அரசின் இணையதளம் **www.tenders.tn.gov.in**–ல் எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.<br>வரைவோலையை The General Manager, Namakkal DCMPU Ltd., Namakkal Payable at Namakkal என பெற்றிருக்க வேண்டும். |
| 4 | செலுத்த வேண்டிய டேவணித்தொகை **(EMD)** | நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையம்– ரூ.43,000/– |
| 5 | ஒப்பந்தக்காலம் | இரண்டு வருடங்கள் 2022–2023 மற்றும் 2023–2024 |
| 6 | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதற்கான கடைசி நாளும், நேரமும் | **16–06–2022 மதியம் 2.00** மணி வரை |
| 7 | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடம், நாளும், நேரமும் (பகுதி 'அ' – தொழில் நுட்ப விபர பகுதி / Technical Bid) | நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் ,1/1167 பரமத்தி ரோடு, EB காலனி(அ),நாமக்கல் (வ &மா). PIN – 637001.<br>**16 –06–2022 மதியம் 2.30** மணி க்கு |
| 8 | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமான தகவல் | உரிய நேரத்தில் டேவணித்தொகையுடன் தகுந்த சான்றிதழ்களோடு சமர்ப்பித்தல். |

*ஆவின்*

# நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் ,1/1167 பரமத்தி ரோடு, EB காலனி(அ),நாமக்கல் (வ &மா). PIN – 637001.

**2022–24**

ஒப்பந்தப்பணி டெண்டர் படிவம்

## நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் கேன்கள் கையாளுதல்

டெண்டர் நாள்

**16–06–2022**

## <u>நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,</u>

2022–2024ஆம் ஆண்டில் நாமக்கல் ஒன்றியத்தின் நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் கேன்களை கையாளுதல் மற்றும் இது தொடர்பான இதர ஒப்பந்தப்பணிகளுக்கான நிபந்தனைகள்.

### <u>ஒப்பந்த நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1. | ஒப்பந்தத்தின் காலம் இவ்வொப்பந்தம் மேற்கொள்ளும் தேதியில் இருந்து இரண்டு ஆண்டு காலம் வரை மட்டும். |
| 2. | விண்ணபத்தில் கோரியுள்ள அனைத்து விபரங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். |
| 3. | டெண்டர்தாரர் தொழிற்சாலைகளின் சட்ட திட்டங்களின்படி தங்கள் நிறுவனத்தை **பதிவு** செய்யப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்டதற்கான பதிவுச் சான்றிதழ் நகலினை ஒப்பந்த (தொழில் நுட்ப விபர பகுதி – ‘அ’ படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் தங்களின் ஒப்பந்தப் படிவத்தை எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக **<u>நிராகரிக்கப்படும்.</u>** |
| 4. | மேலும், ஒப்பந்ததாரர் வருங்கால வைப்புநிதி நிறுவனத்தில் தனது பணியாளருக்காக தனியே கணக்கு எண் பெற்று சட்டபூர்வமாக செலுத்த வேண்டிய பங்குத் தொகையை செலுத்தி இது தொடர்பான சட்டபூர்வமான பதிவேடுகளை பராமரித்து வரவேண்டும். சம்மந்தப்பட்ட அரசுத் துறை அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வுக்கு கோரும்போது இப்பதிவேடுகளை சமர்ப்பிக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் கடமையாகும். **வருங்கால வைப்புநிதி** கணக்கு எண் இல்லாத டெண்டர்தாரரின் ஒப்பந்தப் படிவத்தை எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக **<u>நிராகரிக்கப்படும்.</u>** |
| 5. | **தொழிலாளர் மாநில ஈட்டுறுதி** கழகத்தில் தனது பணியாளர்களுக்கு மருத்துவ வசதி பெறும் உறுப்பினராக டெண்டர்தாரர் பதிவு செய்திருக்க வேண்டும். இல்லையேல் டெண்டர்தாரரின் ஒப்பந்தப் படிவத்தை எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக **<u>நிராகரிக்கப்படும்.</u>**<br>மேலும், ஒப்பந்ததாரர் தொழிலாளர் மாநில ஈட்டுறுதி கழகத்தில் தனது பணியாளருக்காக தனியே கணக்கு எண் பெற்று சட்டபூர்வமாக செலுத்த வேண்டிய பங்குத் தொகையை செலுத்தி இது தொடர்பான சட்டபூர்வமான பதிவேடுகளை பராமரித்து வரவேண்டும். சம்மந்தப்பட்ட அரசுத் துறை அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வுக்கு கோரும்போது இப்பதிவேடுகளை சமர்ப்பிக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் கடமையாகும். |
| 6. | சரக்கு மற்றும் சேவை **(GST)** வரிக்கான பதிவு எண்ணை **(Regn. No.),** டெண்டர்தாரர் பதிவு செய்திருக்க வேண்டும். இல்லையேல் டெண்டர்தாரரின் ஒப்பந்தப் படிவத்தை எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக **<u>நிராகரிக்கப்படும்.</u>**<br>மேலும், முந்தைய வருடத்தில் வருமான வரி தாக்கல் செய்யப்பட்ட விபரமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வருமான வரி & சரக்கு மற்றும் சேவை வரிசட்டங்களின்படி **GST & TDS** (Tax deducted at source) நடப்பு நிலவரப்படி பிடித்தம் செய்யப்படும். |
| 7. | ஒப்பந்ததாரர் சரக்கு மற்றும் சேவை **(GST)** போன்ற சட்ட பூர்வமாக அரசுக்கு செலுத்த வேண்டிய **அனைத்து வரிகளையும்** தனது சொந்த பொறுப்பில் செலுத்தி அதன் விவரத்தினை நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும். |
| 8. | ஒப்பந்த படிவத்தில் கோரியுள்ள சான்றுகள், படிவங்கள் போன்ற அனைத்தையும் ஒப்பந்த படிவத்துடன் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். |
| 9. | ஒப்பந்ததாரருக்கு பால் கேன்களை கையாளும் பணிகளில் **குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள்** முன் அனுபவம் இருக்க வேண்டும். இதற்கான அனுபவச் சான்றிதழ் நகலை ஒப்பந்த (தொழில் நுட்ப விபர பகுதி – ‘அ’ படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட |

| | |
|---|---|
| | வேண்டும். தவறும்பட்சத்தில் தங்களின் ஒப்பந்தப் படிவம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக <u>**நிராகரிக்கப்படும்.**</u> |
| **10.** | ஒப்பந்ததாரர் ஒப்பந்த பணியாளர்கள் அனைவருக்கும் மொத்தமாக தங்களது நிறுவனம் மூலம் குரூப் இன்சுரன்ஸ் செய்துக் கொள்ள வேண்டும். |
| **11.** | ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் செய்யப்படும் பணியாளர்களுக்கு பணி நேரத்தில் எதிர்பாராத விபத்துக்கள் அல்லது இழப்பு ஏற்பட்டால் தங்களது நிறுவனம் தான் பொறுப்பு ஏற்க வேண்டும். ஆவின் நிறுவனம் எந்தவிதத்திலும் பொறுப்பு ஏற்காது. |
| **12.** | ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் செய்யப்படும் பணியாளர்கள் விவரங்கள் அடங்கிய பட்டியல் (மருத்துவர் உடல் பரிசோதனைச் சான்றிதழ் மற்றும் பிறந்த தேதி ஆதாரச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) மற்றும் அவர்களின் புகைப்படம் அடங்கிய பட்டியல் ஒரு நகல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். (ஒப்பந்த உத்திரவு பெற்ற 10 தினங்களில் ஒப்படைக்க வேண்டும்.) அலுவலகத்தில் கொடுக்கப் பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். |
| **13.** | ஒப்பந்தம் செய்யப்படும் பணியாளர்கள் தகுதியான பணியாளர்களாக மட்டும் இருக்க வேண்டும். ஒப்பந்த பணியாளர்களின் மீது எந்தவிதமான கிரிமினல் புகார் மற்றும் வேறுவிதமான புகார்கள் எதுவும் இருக்க கூடாது. இதுசம்மந்தமாக நோட்டரி பப்ளிக்கிடமிருந்து பெறப்பட்ட <u>*நன்னடத்தை சான்றிதழ்*</u> நகலினை ஒப்பந்த ஆணை கிடைக்கப்பெற்றவுடன் ஒன்றிய அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| **14.** | ஒப்பந்தப் பணியாளர்கள் அனைவருக்கும் **அடையாள அட்டை** தங்களது நிறுவனம் மூலம் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும். மேலும் மேற்படி பணியாளர்களை நல்லமுறையில் வழி நடத்த **கண்காணிப்பாளர்** ஒருவரை தங்களது நிறுவனம் நியமிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் ஒன்றிய பொது மேலாளர் அவர்கள் எடுக்கும் முடிவிற்கு ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும். |
| **15.** | ஒப்பந்தப் பணியாளர்கள் அனைவருக்கும் அரசு ஆணையின்படி நடைமுறையிலிலுள்ள குறைந்த பட்ச ஊதியத்துடன் சட்டபூர்வமாக வழங்க வேண்டிய இதரத் தொகைகள் அனைத்தையும் வழங்கி (அ) செலுத்தி, அதற்கான அத்தாட்சி நகலை தங்களது பணப்பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும். |
| **16.** | ஒப்பந்த பணிகளுக்குரிய பணப்பட்டியல்களை மூன்று நகல்களாக பிரதி மாதம் 7ம் தேதிக்குள் (வருங்கால வைப்புநிதி பங்கு மற்றும் இ.எஸ்.ஐ நிறுவனப்பங்கு ஆகியவைகளை செலுத்திய நகல்கள், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கியதற்கான பட்டியல் நகல், சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலகர்களின் சான்றிதழ்கள் மற்றும் வருகைப்பதிவேட்டின் நகல்கள் ஆகியவைகளுடன் ) சமர்ப்பித்து பணப்பட்டியல் தொகை கோர வேண்டும். அது தொடர்பான சட்டபூர்வமான பதிவேடுகளை தவறாமல் பராமரித்து அவ்வப்போது பரிசீலனைக்கு ஒன்றியத்திலும் மற்ற சட்டபூர்வ ஆய்வின்போதும் சமர்ப்பிக்க வேண்டும். எத்தருணத்திலும் ஊதியம் வழங்கப்பட வில்லை என தெரிய வருமாயின் ஒப்பந்தத்தை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உடனடியாக இரத்து செய்ய பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு. |
| **17.** | டேவணித் தொகை (EMD) ரூ.43,000/– (ரூபாய் முப்பத்தி நான்கு ஆயிரம் மட்டும் ) கேட்பு வரைவோலையாக விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>டேவனித்தொகை விலக்கு வேண்டுவோர் இப்பணிக்கான MSME சான்றிதழ் (Udyam registration certificate) பெற்றிருக்க வேண்டும். |
| **18.** | டெண்டர் படிவங்கள் (அ) பகுதி மற்றும் (ஆ) பகுதி ஆகிய இரண்டு பகுதிகளையும் தனித்தனி கவர்களில் வைத்து மூடி முத்திரையிட்டு ஒரு கவரின் மேல் (அ) பகுதி தொழில் நுட்ப விபர பகுதி என்றும் (Technical bid), மற்றொரு கவரின் மேல் (ஆ) பகுதி விலை விவர பகுதி என்றும் (commercial bid) குறிப்பிட்டு மேற்கண்ட இரு கவர்களையும் சேர்த்து ஒரு பெரிய கவரில் மூடி முத்திரையிட்டு கவரின் மேல் டெண்டர் பணியின் பெயர், டெண்டர் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் ஆகிய விபரங்களை தெளிவாக குறிப்பிட வேண்டும். தவறும்பட்சத்தில் தங்களின் ஒப்பந்தப் படிவம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக <u>**நிராகரிக்கப்படும்.**</u> |

| | |
|---|---|
| 19. | ஒப்பந்தப்புள்ளிகளை முழுமையாக ஏற்கவோ, தள்ளிவைக்கவோ அல்லது இரத்து செய்யவோ பொது மேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. |
| 20. | பணியாளர்களின் வயது வரம்பு அரசு விதிகளுக்குட்பட்டு 18 முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும். மேலும் எவ்வித தொற்று நோயால் பாதிக்கப்படாதவர்களை மட்டுமே பணிக்கு அனுப்ப வேண்டும். |
| 21. | டெண்டரில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் பிணைய தொகையினை (security deposit) வேலை ஆணை பெறப்பட்ட 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். இதற்கு எந்தவித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. |
| 22. | 07–06–2022 அன்று நடைபெற்ற உள்ள கலந்துரை ஆய்வின் கூட்டத்தின் தீர்மானத்தை தமிழக அரசின் இணைய தளம் **www.tenders.tn.gov.in**–ல் இருந்து பதிவிறக்கம் செய்து அதனையும் ஒப்பந்த படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கவேண்டும். |
| 23. | டெண்டரில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளை ஏற்று ரூ.100/– மதிப்பிற்கு குறையாத முத்திரைத் தாளில் ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும். |
| 24. | பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிக்கான பிணையத் தொகை (security deposit) ரூ.2,15,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினைந்து ஆயிரம் மட்டும்) தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் முழுமையாக செலுத்த வேண்டும். இதற்கு வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது.<br>இத்தொகை செலுத்தியதற்கான ரசீது நகலை முதன் முதலாக பணப்பட்டியல் கோரும்போது கண்டிப்பாக இணைத்து அனுப்ப வேண்டும். இல்லையெனில் பணப்பட்டியிலின் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. மேலும் இத்தொகையினை சம்மந்தப்பட்ட ஆண்டுகளின் சட்டப்பூர்வமான தணிக்கை அறிக்கை பெற்றவுடன் திரும்ப வழங்கப்படும். |
| 25. | அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தார் ரூபாய் : 10/– செலுத்தி இவ்வொன்றியத்தின் இணை உறுப்பினராக சேர்ந்து கொள்ள வேண்டும் அத்தொகை திருப்பி வழங்கப் படமாட்டாது. மேலும் இவ்வொன்றிய தேர்தலில் வாக்களிக்கவோ அல்லது ஒன்றிய லாபத்தில் பங்கு பெறவோ எவ்வித உரிமையும் இல்லை. |
| 26. | டெண்டர் இரண்டு பகுதி முறையில் நடைபெறுவதால் பகுதி ''அ'' பகுதி – தொழில் நுட்ப விபர பகுதி என்றும் (Technical bid) - கவரில் ஒன்றியம் கோரும் ஆவணங்கள் மற்றும் தகுதிகள் அனைத்தும் ஒன்றியத்தினால் ஏற்றுக்கொள்ளத்தக்காத இருந்தால் மட்டுமே அதன் அடிப்படையில் தேறிய ஒப்பந்ததாரின் ''ஆ'' பகுதி – விலை விவர பகுதி என்றும் (commercial bid) – கவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். தகுதி பெற்ற ஒப்பந்த படிவங்களின் விலை விபர பகுதியை (பகுதி – ''ஆ'') 16 –06–2022 அன்றோ (அ) திறக்கும் தேதி பகுதி 'அ'ல் தகுதி பெற்றவர்களுக்கு தெரிவித்தபின்னர் திறக்கப்படும்வேறு தேதியை முடிவு செய்த பின்னரோ திறக்கப்படும். |
| 27. | குறிப்பிட்ட காலக்கெடுவுக்குபின் (16–06–2022 மதியம் 2.00 மணிக்கு மேல்) ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அஞ்சல் வழியில் ஏற்படும் காலதாமத்திற்கு ஒன்றியம் பொறுப்பேற்காது. |
| 28. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் அனைத்தும் **Dy. Registrar (Dairying), Namakkal** நாமக்கல் மாவட்ட எல்லைக்குட்பட்டதாகும். |
| 29. | மேற்படி ஒப்பந்த காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு அல்லது புதிய ஒப்பந்தம் பணி ஆணை வழங்கும் காலம் வரை இதில் எதில் முன்னதோ அதுவரையிலும் நீட்டிக்கலாம். இதற்கு ஒப்பந்தாரர் கட்டுப்பட்டு மேற்படி ஒப்பந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும். |
| 30 | ஒப்பந்த பணியாளர்கள் பீடி, சிகரெட், லாகிரி வஸ்துகள், பணி நேரத்தில் உபயோகிக்கக்கூடாது. மது அருந்திவிட்டு பணிக்கு வரக்கூடாது. அவ்வாறு மது அருந்தியது தெரிய வந்தால் சம்மந்தப்பட்ட பணியாளர் பணியிலிருந்து அப்புறப்படுத்தப்படுவார். அத்துடன் அன்றைய பணிக்கு வராததாகக் கருதி அபராதம் விதித்து பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். |

| | |
|---|---|
| 31. | மேலும் இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்படும் பணி ஆணையின்பேரில், இவ்வொன்றியத்தில் எவ்வித நிரந்தர பணி ஆணையும் கோர உரிமை இல்லை. |
| 32 | ஒப்பந்தப் படிவங்களின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட வேண்டும். |
| 33 | மேற்கண்ட நிபந்தனைகளை நன்கு தெரிந்துக் கொண்டேன். |
| 34 | கடந்த 2 வருட ஆண்டு (Annual Turn Over) வருமானம் ரூ.30 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும் . |
| 35 | கடந்த 2 வருட வருமான வரி தாக்கல் செய்த சான்றிதழ் பெற்று இருக்க வேண்டும். தற்பொழுது GST நடைமுறையில் இருக்க வேண்டும். |
| 36 | GST தாக்கல் செய்த 2018–2019,2019–2020,2020–2021 கான GSTR,9,9C சான்றிதழ் பெற்று இருக்க வேண்டும். |
| 37 | 2018–2019,2019–2020,2020–2021 கான Income tax returns சான்றிதழ் பெற்று இருக்க வேண்டும். அவற்றின் நிதிநிலை அறிக்கைகளுடன் சமர்ப்பிக்க வேண்டும் |

இடம் –

நாள் –

## நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,

2022–2024 ஆம் ஆண்டில் நாமக்கல் ஒன்றியத்தின் நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் கேன்களை கையாளுதல் மற்றும் இது தொடர்பான இதர ஒப்பந்தப்பணிகளுக்கான நிபந்தனைகள்.

### நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1 | நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து காலை மற்றும் மாலை ஆகிய இரு வேளைகளிலும் பால் வண்டிகளில் எடுத்து வரப்படும் சுமார் 1400 பால் கேன்களை பால் வரவேற்பு பிரிவில் இறக்குதல், கேன்களில் உள்ள சீல்களை அகற்றி குப்பைத் தொட்டியில் போடுதல், மூடிகளை கழற்றுதல், பால் அளவீடு செய்யும் இடத்திற்கு கொண்டு செல்லுதல், பால் அளவீடு செய்ய ஊற்றுதல், கழற்றிய மூடிகளையும் காலி கேன்களையும் சுத்தம் செய்யும் மெசினில் ஏற்றுதல், சுத்தம் செய்யப்பட்ட கேன்களையும் மூடிகளையும் முறையாக அடுக்கி வண்டியில் ஏற்றபட ஏதுவாக வைத்தல் வேண்டும். |
| 2 | பால்கேன் வண்டிகள் வருவதற்கு ஒரு மணி நேரம் முன்னமே காலையிலும், மாலையிலும் அனைத்து பணியாளர்களும் பாதுகாப்பு அலுவலகத்தில் உள்ள பணி பதிவேட்டில் கையொப்பமிட்ட பிறகுதான் பணிக்கு வர வேண்டும். கேன் கழுவும் இயந்திர தொட்டிகளில் தேவையான சுடுநீர் நிரப்பி ஒன்றிய/ பால் குளிரூட்டும் நிலைய அதிகாரியால் வழங்கப்படும் சுத்தப்படுத்தும் இராசயனங்களை சம்மந்ப்பட்ட அதிகாரிகள் கூறும் விகிதத்தில் பயன்படுத்தி கேன் கழுவும் இயந்திரத்தை தயார் நிலையில் வைக்க வேண்டும். |
| 3 | கன்வெயர் செயின் பழுது ஏற்படும் சமயங்களில் பால் கேன்களை பால் கொட்டிவிடாமல் உருட்டி சென்று பால் எடையிடும் தொட்டியில் ஊற்ற வேண்டும். |
| 4 | கேன் கழுவும் இயந்திரம் பழுதுபடும் வேளையில், காலி கேன்களையும் மூடிகளையும் தேவையான ஆட்களை வைத்து கொண்டு கைகளால் சுத்தப்படுத்தி கொடுக்க வேண்டும். |
| 5 | கேன் கையாளும் பணிகள் முடிவடைந்த பின்பு அனைத்து இயந்திரங்கள் மற்றும் இதர பொருட்களை அதிகாரிகளின் அறிவுரைகளின்படி உடனே தூய்மைப்படுத்த வேண்டும். பால் கேன் கையாளும் வளாகத்தில் உள்ள குப்பைக்கூளங்களை தினந்தோறும் சுத்தம் செய்து சுகாதாரமான முறையில் வைத்துக்கொள்ள வேண்டும். கேன்கையாளும் இடங்களில் உள்ள தரைப்பரப்பினை சோப்பு ஆயில் கொண்டு காலை மற்றும் மாலை இருவேளைகளிலும் முறையாக சுத்தம் செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் வேளைக்கு ரூ.1000/– வீதம் அபராதம் விதித்து பணப்பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். |
| 6 | எல்லா நாட்களிலும் காலை, மாலை இரு வேளைகளிலும் குறைந்தது ஷிப்டுக்கு கீழ்க்கண்ட எண்ணிக்கைக்கு குறையாமல் (கீழ்க்கண்ட அளவில் கேன்களை கையாள) பணியாளர்கள் தேவைப்படுகிறது. |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியிடம்</th><th>கேன்களின் எண்ணிக்கை (இரண்டு ஷிப்டுகளுக்கும் சேர்த்து ஒரு நாளைக்கு)</th><th>பணியாளர்களின் எண்ணிக்கை (தலா ஒரு ஷிப்டுக்கு)</th></tr>
<tr><td>1</td><td>நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையம்</td><td>1400</td><td>08</td></tr>
</table>
</td></tr>
<tr><td>7</td><td>இயந்திரங்கள் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதற்கேற்றவாறு பணியாளர்களை கூடுதலாக பணியமர்த்த வேண்டும். மேற்படி விபரங்களின் தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை கூட்டவோ அல்லது குறைக்கவோ பொதுமேலாளருக்கு முழு உரிமை உண்டு.</td></tr>
<tr><td>8</td><td>குறிப்பிட்ட காலத்திற்குள் பணியாளர்கள் வராமல் காலம் தாழ்த்தி வந்தால் நபர் ஒன்றுக்கு ரூ.500/– அபராதம் விதிக்கப்படும். குறிப்பிட்ட பணியாளர்களுக்கு குறைவாக பணியாளர்களை அமர்த்தினால் வராத நபர்களுக்கு ரூ.200/– அபராதம் விதிக்கப்படும். குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் பால் வண்டிகள் இறக்க இயலாமல் போனால் முதல் 3 பால் வண்டிகளுக்கு ரூ.1000/–மும் 6 வண்டிகளுக்கு ரூ.2000/– மும் அடுத்த 6 வண்டிகளுக்கு மேல் ரூ.3000/–மும் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.</td></tr>
<tr><td>9</td><td>ஒப்பந்ததாரரால் பால் கேன்கள் கையாளுமை செய்வதில் தாமதம் ஏற்பட்டாலோ அல்லது சரிவர கழுவாமல் இருந்து அதனால் அன்றைய தினம் பால் கெட்டுபோக நேரிட்டால் அதற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். மேலும் பால் கேன்களை கையாளும்போது பாலை கீழே கொட்டிவிட்டால் அதற்கு ஈடான அபராத தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும். மாதத்திற்கு இருமுறைக்கு மேல் மூன்றாம் முறையாக அசம்பாவிதம் ஏற்படின் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஒப்பந்தத்தை இரத்து செய்ய பொது மேலாளர் அவர்களுக்கு முழு உரிமை உண்டு.</td></tr>
<tr><td>10</td><td>மேற்கண்ட பணிகளுடன் நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தின் அவசரம் மற்றும் அத்தியாவசிய பணிகளை முன்னிட்டு ஒன்றிய/ பால் குளிரூட்டும் நிலையங்களின் அலுவலர்கள் அவ்வப்போது கூறும் கூடுதல் பணிகளை மறுப்பின்றி செய்து முடிக்க வேண்டும். இதற்காக தொகை ஏதும் தனியே வழங்கப்பட மாட்டாது. அதிகாரிகள் அளிக்கும் அறிவுறைகளின்படி ஒப்பந்நதாரர் பணியாளர்களை ஏற்பாடு செய்து எவ்வித குறையும் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.</td></tr>
<tr><td>11</td><td>இரவு நேர பணிகளில் பெண் பணியாளர்களை பணிக்கு அமர்த்தினால் அவர்களை பாதுகாப்பாக அழைத்து வந்து பணி முடிந்தபின் அவர்களின் இருப்பிடத்திற்கு பாதுகாப்பாக கொண்டு சேர்ப்பது ஒப்பந்ததாரரின் கடமையாகும்.</td></tr>
<tr><td>12</td><td>ஒப்பந்த பணியாளர்கள் பணிக்கு வராமலோ அல்லது பணியில் ஈடுபடாமல் போனாலோ இதனால் பரமத்தி வேலூர் குளிரூட்டும் நிலையத்தில் ஏற்படும் அவபெயர் / நஷ்டம் / இழப்புத் தொகை முழுவதையும் ஒப்பந்ததாரரே பொறுப்பேற்று ஒன்றியத்தில்/ பால் குளிரூட்டும் நிலையங்களில் செலுத்த வேண்டும்.</td></tr>
<tr><td>13</td><td>ஒன்றிய / பால் குளிரூட்டும் நிலைய இயந்திரங்களுக்கு ஒப்பந்த பணியாளர்களின் கவனக்குறைவால் இழப்பு ஏதேனும் ஏற்படின் அவ்விழப்புத் தொகையினை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.</td></tr>
</table>

| | |
|---|---|
| 14 | மேற்குறிப்பிட்டுள்ள அபராதம்/இழப்புத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் இந்த ஒப்பந்தப்பணிகள் தொடர்பாக ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள பிணையத்தொகை மற்றும் பணப்பட்டியல் ஆகிய தொகைகளை ஈடுசெய்வதுடன் ஒப்பந்த பணியை இரத்து செய்து சட்டரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். |
| 15 | நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தின் நற்பெயருக்கும் நன்மதிப்பிற்கும் களங்கம் ஏற்படா வண்ணம் ஒப்பந்த பணிகளை செவ்வனே செய்து முடிக்க வேண்டும். |
| 16 | ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் தொழிலுறவு தொடர்பான சட்ட சிக்கல்களை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். ஒன்றியம் / பால் குளிரூட்டும் நிலையம் எந்த வகையிலும் இதில் எவ்வித பொறுப்பும் ஏற்காது. |
| 17 | ஒப்பந்தபணியாளர்கள் வளாகத்தில் எவ்வித ஒழுங்கீன நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அதற்கு ஒப்பந்ததாரரே முழுப்பொறுப்பு ஆவார். இதன் மீதான நடவடிக்கைகள் குறித்து பொது மேலாளர் அவர்கள் எடுக்கும் முடிவே இறுதியானது. |
| 18 | ஒவ்வொரு ஒப்பந்ததாரர்களும் தங்கள் கீழ் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களின் போட்டோ, நிரந்தர முகவரி, மற்றும் இரத்தவகை குறிப்பிட்டு அடையாள அட்டை, Over Coat, தலை உறை, வாயுறை, மற்றும் கையுறை, போன்ற உபகரணங்கள் அனைத்தையும் ஒப்பந்ததாரர் தனது சொந்த பொறுப்பில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு வாங்கி கொடுக்க வேண்டும்.<br><br>மேலும் தூய்மையான ஆடைகளை மட்டும் ஒப்பந்தப் பணியாளர்கள் அணிந்திருக்க வேண்டும். கை மற்றும் கால் நகங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். தலைமுடிகளை முறையாக திருத்தம் செய்து இருக்க வேண்டும். பெண் பணியாளர்கள் பணிநேரத்தில் கண்டிப்பாக மேல் சட்டை அணிந்திருக்க வேண்டும். வளாகத்தில் பெண் பணியாளர்கள் தலையில் பூக்களை வைத்திருக்க கூடாது. பணியாளர்கள் வாசனை திரவியங்களை பயன்படுத்தகூடாது. கைகளை நன்றாக கழுவி சுத்தம் செய்த பின்னரே ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். உள்ளே நுழையும் போது கிருமிநாஷினி கலக்கப்பட்ட நீரில் கால்களை நனைத்து வரவேண்டும்.தவறும்பட்சத்தில் ஒன்றிய பொது மேலாளர் அவர்கள் எடுக்கும் முடிவே இறுதியானது. |
| 19 | ஒப்பந்ததாரரால் மேற்படி பணிகளை செய்வதில் காலதாமதம் ஏற்பட்டால் அதற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். மேலும் நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு சொந்தமான பொருட்களை/இயந்திரங்களை கையாளும்போது கீழே போட்டுவிட்டாலோ/பழுது ஏற்பட்டுவிட்டாலோ அதனால் ஏற்படும் இழப்பிற்கு ஈடான அபராத தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும். மாதத்திற்கு இருமுறைக்கு மேல் மூன்றாம் முறையாக இவ்வித அசம்பாவிதம் ஏற்படின் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஒப்பந்தத்தை இரத்து செய்ய பொது மேலாளர் அவர்களுக்கு முழு உரிமை உண்டு. |
| 20 | இப்பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்கள்பணி முடிந்து வெளியே செல்லும்போது பால் பொருட்கள் / சாமான்கள் எதையும் எடுத்துச் செல்லக்கூடாது. மீறும்பட்சத்தில் வெளியே கொண்டு செல்லும் பால்/ பொருட்கள் /சாமான்கள் ஆகியவற்றின் மதிப்போடு அபராதத்தொகையை ரூ.1000/–யையும் சேர்த்து மொத்த தொகையை அல்லது ஒன்றியம் நிர்ணயம் செய்யும் தொகையை ஒப்பந்ததாரரின் பணிப்பட்டியலில் இருந்து பிடித்தம் செய்யப்படும். |
| 21 | மேற்படி பணியாளர்கள் இப்பணிக்கு தேவையான இராசாயனம் மற்றும் கட்டுமான பொருட்கள், உபகரணங்கள் ஆகியவைகளை சம்மந்தப்பட்ட கிடங்கு மற்றும் இதர பிரிவிகளிலுருந்து இப்பணி தொடங்குவதற்கு முன்பே கொண்டு வந்து தயாராக |

| | |
|---|---|
| | வைத்திருக்க வேண்டும். பணி முடிவடைந்த பின் மீதம் அடைந்த பொருட்களை பிரிவு அலுவலர் அறிவுரையின்படி மேற்படி கிடங்கில் சேர்க்க வேண்டும். தவறும்பட்சத்தில் ஒவ்வொரு முறைக்கும் ரூ.**500/–** அபராதத் தொகையாக விதித்து மேற்படி பட்டியலிருந்து பிடித்தம் செய்யப்படும். |
| 22 | வருமான வரி சட்டப்படி TDS (Tax deducted at source) நடப்பு நிலவரப்படி பிடித்தம் செய்யப்படும். |
| 23 | ஒப்பந்தப் பணிகள் தொடர்பாக அரசு/ நாமக்கல் ஒன்றியம் அவ்வப்போது அறிவிக்கும் அனைத்துவித நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டு அரசு/ நாமக்கல் ஒன்றியத்தின் சட்ட திட்ட நடைமுறைகளுக்குக் கட்டுப்பட்டு ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். |
| 24 | ஒப்பந்தம் திறக்கப்படும் நாளான **16–06–2022** அன்று அரசு **விடுமுறை** தினமாக அறிவிக்கும் பட்சத்தில் அதற்கு **அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில்** பகுதி **- 1** முன் தகுதி படிவம் (Technical Bid) திறக்கப்படும். |
| 25 | ஒப்பந்தப் புள்ளிகளை முழுமையாக ஏற்கவோ, தள்ளிவைக்கவோ அல்லது இரத்து செய்யவோ பொது மேலாளர் அவர்களுக்கு **முழு அதிகாரம்** உண்டு. மேலும் ஒப்பந்த நிபந்தனைகளில் ஏதெனும் பிரச்சனைகள் எழுந்தால், நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், நாமக்கல். பொது மேலாளர் அவர்களின் **முடிவே** இறுதியானது. மேலும் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை எவ்வித காரணமும் இல்லாமல்/ எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யவும் ஒன்றிய பொது மேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. |
| 26 | மேற்கண்ட அனைத்து நிபந்தனைகளையும் ஒப்புக் கொண்டு மேலும் ஒன்றியத்தின் சட்ட திட்டங்கள் அனைத்திற்கும் கட்டுபட்டு ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புக் கொண்டு இதனடியில் கையொப்பம் இட்டுள்ளேன். |

இடம் – நாமக்கல்

நாள் –

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

**நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,**
**நாமக்கல் அஞ்சல், நாமக்கல்.**

**2022–24**ம் ஆண்டில் நாமக்கல் ஒன்றியத்தின் நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு **40** லிட்டர் கொள்ளளவுள்ள பால் கேன்களை கையாளுதல் மற்றும் இது தொடர்பான இதர ஒப்பந்தப்பணிகளை செய்யும் ஒப்பந்தப்பணிகள்

பகுதி – **"அ "**

(தொழில் நுட்ப விபர பகுதி / Technical Bid)

| | | |
|---|---|---|
| 1 | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
| அ. | தொலைபேசி எண் | |
| ஆ | செல் நெம்பர் | |
| இ. | E-mail I.D. | |
| 2 | நிறுவனத்தின் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி | |
| அ. | தொலைபேசி எண் | |
| ஆ. | செல் நெம்பர் | |
| 3 | அ) டெண்டர்தாரர் தொழிற்சாலைகளின் சட்ட திட்டங்களின்படி தங்கள் நிறுவனத்தை பதிவு செய்துள்ளதா ?<br><br>ஆ) ஆம் எனில் பதிவு செய்யப்பட்டதற்கான பதிவுச் சான்றிதழ் நகலினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா ?<br><br>இ) இருப்பின் விவரம் | |

| | | |
|---|---|---|
| 4. | ஒப்பந்ததாரருக்கு இவ்வொப்பந்த பணிகளில் (அல்லது) இவ்வொப்பந்த பணிகளுக்கு ஈடான பணிகளில் **குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள்** முன் அனுபவம் உள்ளதா ?<br><br>ஆம் எனில், இதற்கான சான்றுகளின் (order copies) விவர நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா ? | |
| 5 | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கு உள்ளதா ? | |
| அ. | இருப்பின் கணக்கு எண் | |
| ஆ | கடைசியாக வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திற்கு செலுத்தப் பட்ட தொகை மற்றும் இரசீது எண் மற்றும் நாள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 6.<br>அ. | தொழிலாளர் மாநில ஈட்டுறுதி கழக மருத்துவ வசதி பெற்றுள்ளதா ? இருப்பின் கணக்கு எண். விபரம் மற்றும் ஆவணத்தின் நகலை இணைக்கவும் | |
| ஆ. | கடைசியாக செலுத்தப்பட்ட சந்தா விபரம் | |
| 7 | சரக்கு மற்றும் சேவை வரி **(GST)** கணக்கு உள்ளதா ? | |
| அ. | இருப்பின் கணக்கு எண் மற்றும் பதிவுசெய்த ஆவணத்தின் நகலை இணைக்கவும் | |
| ஆ. | **1.** கடைசியாக சரக்கு மற்றும் சேவை வரி **(GST)** செலுத்தப் பட்ட தொகை மற்றும் இரசீது எண் மற்றும் நாள் (நகல் இணைக்கப்பட வேண்டும்)<br><br>**2.** February-22 & March-22 மாதத்திற்கான GSTR-1 & GST-3B ஆவணத்தின் நகலை இணைக்கவும் | |
| **8.** | வருமான வரி கணக்கு எண்<br>(PAN NO) | |
| **9.** | வருமான வரி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வருமான வரி படிவங்களில் கடைசியாக செலுத்திய நகல் இணைக்கப்பட வேண்டும்.<br>2018–19,2019–20,2020–21 வருடங்களுக்கான Financial statements இணைக்கப்பட வேண்டும். | |

| | | |
|---|---|---|
| 10. | தங்கள் நிறுவனம் நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு சொந்தமான சொத்துக்களுக்கு / பொருட்களுக்கு ஏற்படும் இழப்பு / திருட்டு போன்றவைகளுக்கு ஈடு செய்ய / திரும்ப செலுத்த உத்திரவாதம் அளிக்குமா ? | |
| 11. அ) | ‘‘டேவணித் தொகை‘‘ (EMD) செலுத்தப்பட்ட விபரம் (இணைக்கப்பட வேண்டும்) | |
| | வரைவோலை (டி.டி.) எண் மற்றும் தொகை | |
| | வரைவோலை நாள் | |
| | வங்கியின் பெயர் | |
| ஆ) | ‘‘டேவணித் தொகை‘‘(EMD) செலுத்துவதிலிருந்து **விலக்குக்** கோரப்பட்டுள்ளதா ?<br><br>ஆம் எனில், அதற்காக இணைக்கப்பட்டுள்ள சான்று நகல்களின் விபரம் | |
| 12 | தங்களது நிறுவனத்தை தகுதியற்ற நிறுவனமாக இவ்வென்றியத்தாலோ அல்லது வேறு நிறுவனத்தாலோ அறிவிக்கப் பட்டுள்ளதா ?<br><br>ஆம் எனில், விபரம் | |

குறிப்பு : மேலே குறிப்பிட்டுள்ள வரிசை எண் 3 முதல் 12 வரை இல்லை என தெரிவிக்காமல் உரிய படிவங்களில் இணைக்க வேண்டும். ஏதேனும் ஒரு விபரம் இல்லை என தெரிவிக்கும்பட்சத்தில் தங்களது நிறுவனம் தொழிற்நுட்ப தேர்வில் நிராகரிக்கப்படும் என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலே அளிக்கப்பட்ட அனைத்து விவரங்களும் சரியானவை என்று சான்று அளிக்கிறேன்.

இடம் –

நாள் –

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

**<u>நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,</u>**
**<u>நாமக்கல் அஞ்சல், நாமக்கல்.</u>**

பகுதி – ‘‘ஆ‘‘

**(விலை விபர பகுதி / Commercial Bid)**

நிறுவனத்தின் பெயர் /
ஒப்பந்ததாரரின் பெயர் –

ஒப்பந்ததாரின் விலாசம் –

நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தில் பல்வேறு கிராம சங்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து காலை மற்றும் மாலை வேளைகளில் பால் வண்டிகளில் எடுத்து வரப்படும் சுமார் 1400 பால் கேன்களை

(1) பால் வரவேற்பு பிரிவில் இறக்குதல்.
(2) கேன்களில் உள்ள சீல்களை அகற்றி குப்பை தொட்டியில் போடுதல்.
(3) மூடிகளை கழற்றுதல்.
(4) பால் அளவீடு செய்யும் இடத்திற்கு கொண்டு செல்லுதல்.
(5) பால் அளவீடு செய்யதக்க வகையில் தொட்டிகளில் ஊற்றுதல்.
(6) கழற்றிய மூடிகளையும், காலி கேன்களையும் கேன் கழுவும் இயந்திரத்தில் வைத்தல்.
(7) சுத்தம்செய்த பின் கேன்களில் முறையாக மூடிகளை அடுக்கி வண்டிகளில் ஏற்ற ஏதுவாக
வைத்தல் மற்றும் இது தொடர்பான இதர பணிகள் போன்ற பணிகளை செய்தல்
(8) RMT வண்டிகளில் பால் நிரப்புதல்

| வ. எண். | விபரம் | கேன் ஒன்றுக்கு<br>ரூ. பை. |
|---|---|---|
| 01) | நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தில் 40 லிட்டர் கொள்ளளவுள்ள பால் கேன்களை கையாளுதல் மற்றும் இது தொடர்பான இதர ஒப்பந்தப்பணிகளை மேற்கொள்ள கேன் ஒன்றுக்கு | |
| 02) | (+) C.G.S.T @ 9% | |
| 03) | (+) S.G.S.T @ 9% | |
| 04) | **Grand Total** | |

இடம் – நாமக்கல்

நாள் –

ஒப்பந்ததாரரின் கையொப்பம்